# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் 2037 புரட்டாதி 27 வெள்ளிக்கிழமை (13.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:318


# முகமாலை, கிளாலிப் பகுதிகளில் நேற்றும் தொடர்ந்தது மோதல்!

## படையினரின் 74 சடலங்கள் செஞ்சிலுவையிடம் ஒப்படைப்பு



கொழும்பு,ஒக்ரோபர் 13

கிளாலி, முகமாலை களமுனைகளில் நேற்றும் மோதல்கள் நடைபெற்றன. இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க இதனை உறுதி செய்தார்.

விடுதலைப் புலிகளினதும் இராணுவத்தினரதும் காவல் அரண்களுக்கு இடைப்பட்ட பகுதியில் மிகக் குறுகிய தூரத்தில் நின்று இரு தரப்பினரும் நேற்று மோதியதாக களமுனைத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற சமரில் பலியான எழுபத்து நான்கு படையினரின் சடலங்களை, விடுதலைப் புலிகள் நேற்றுப் பிற்பகல் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளித்ததாக கிளிநொச்சியில் சமாதானச் செயலகம் அறிவித்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப்படை - புலிகள் அம்பாறையில் மோதல்

அம்பாறை, ஒக்.13

அம்பாறை மாவட்டம் கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி விசேட அதிரடிப்படையினர் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித் தன.

விமானத் தாக்குதல்கள் மற்றும் ஆட்லறி ஷெல் வீச்சுக்கள் சகிதம் அதிரடிப்படையினர், புலிகளின் நிலைகள் மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தினர் என்று கூறப்பட்டது. புலிகளும் பதில் தாக்குதல் தொடுத்தனர். இந்தத் தாக்குதல்களால் இரு தரப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மோதல் நிலைமையைக் கண்டிக்கிறது அமெரிக்காவின் இராஜாங்கத் தரப்பு

கொழும்பு, ஒக்.13

தற்போது இடம்பெற்றுவரும் மோதல் நிலைமைகளைத் தவிர்த்து இலங்கை அரசும் - விடுதலைப் புலிகளும் உடன் சமதானப் பேச்சுக்கான புறச்சூழலை உருவாக்கவேண்டும்.

- இவ்வாறு இரு தரப்பினருக்கும் கோரிக்கை விடுத்துள்ளது அமெரிக்கா.

இது தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேசவல்ல அதிகாரி மெக்கொர்மக் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

(8 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர் வரும் 19 ஆம் திகதி மீண்டும் வருகிறார் போவர்

கொழும்பு, ஒக்.13

அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இம் மாத இறுதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள பேச்சு தொடர்பாக ஆராய்வதற்காக நோர்வேயின் விசேட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகர்ப் பகுதியில் இரு வேறு சம்பவங்களில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் மூவர் பொலிஸார் இருவர் பலி!

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ்.நகரப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இருவேறு சம்பவங்களில் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த மூவரும் யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இருவரும் பலியாகினர். மற்றும் ஐவர் காயமடைந்தனர். அவர்களில் இருவர் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் மின்சார நிலைய வீதியில் உள்ள புடைவைக் கடை ஒன்றில் நப்பு வாங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது இனந்தெரியாத ஆயுததாரிகள் வேட்டுக்களைத் தீர்த்தனர்.

அவ்வேளை ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான ஆர்.லிங்கேஸ்வரன், ஏ.குணநாயகம், ஆலாலசுந்தரம் சதீஸ் (வயது 23) ஆகியோரும் தர்மகுலசிங்கம் நிரோஜன் (வயது 20) என்பவரும் உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

**கச்சேரி - நல்லூர் வீதியில்**

கச்சேரி - நல்லூர் வீதியில் நாவலர் வீதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் இணையுமாறு ஐ.தே.கவுக்கு மஹிந்தர் அழைப்பு!

### நேற்று ரணிலுடன் சிறிதுநேரம் தனியாகவும் சந்திப்பு



கொழும்பு, ஒக்.13

அமைச்சரவையில் இணையுமாறு ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கட்சியின் உயர்மட்டக் குழுவினர் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோது இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

நேற்றைய சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கை வருமாறு:-

தேசிய இணக்கப்பாடு ஒன்றுக்கு வருவதற்கான நோக்குடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றின் பிரதிநிதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பதில் தாக்குதல்களை மட்டுமே படையினர் நடத்தினால் புலிகள் பகுதிக்குள் எப்படிப் படையினரின் சடலங்கள்?

### ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்கு சிவாஜி எம். பி. 'பதில் கேள்வி'

கொழும்பு, ஒக். 13

இராணுவம் பதில் தாக்குதலைத்தான் மேற்கொள்கின்றதென்றால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் இராணுவச் சிப்பாய்களின் சடலங்கள் வந்ததெப்படி?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பி. எம்.கே.சிவாஜிலிங்கம் செய்தியாளர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு மேற்கண்டவாறு பதில் கேள்வியொன்றின் மூலம் பதிலளித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செய்தியாளர் மாநாடு கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹோட்டல் றேணுகாவில் இடம்பெற்றது.

''அரசு தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை, புலிகளின் தாக்குதலுக்கு பதில் தாக்குதல்களையே மேற்கொள்கின்றோம்'' எனத் தெரிவிக்கின்றது. இது குறித்து உங்கள் கருத்து என்ன என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை குறைத்து மதிப்பிட்டு விட்டது இராணுவம் றொய்ட்டர் செய்திச்சேவைக்கு ஆய்வாளர் கருத்து

''தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிமையையும் அவர்களது தந்திரோபாய நடவடிக்கைகளையும் - செயற்படுத்தும் விதங்களையும் - இராணுவம் குறைத்து மதிப்பிட்டுவிட்டது'' - இவ்வாறு ''ராவய'' வார இதழின் ஆய்வாளர் நாமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

றொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு அவர் தெரிவித்த கருத்து பகிர்வின்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

முகமாலையில் நடைபெற்ற மோதலின்போது விடுதலைப் புலிகளின் பொறிக்குள் இராணுவம் உள்நுழைந்துவிட்டது. பரந்த வெளியில் இராணுவத்தை நுழையவிட்டு வளைத்து எறிகணைத் தாக்குதலின் மூலம் வீழ்த்தியிருக்கின்றனர். தங்களது போரிடும் ஆற்றல் குறைந்துவிடவில்லை என்பதைப் புலிகள் நிரூபித்திருக்கின்றனர்.

இருப்பினும் வான் தாக்குதலைப் புலிகளால் எதிர்கொள்வதற்கு இப்போதும் முடியவில்லை. அவர்களுக்குத் தங்களு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆண்டான்குளத்தில் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஒக். 13

திருகோணமலை ஆண்டான் குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் ஆண் ஒருவரின் சடலத்தை இராணுவத்தினர் மீட்டுள்ளனர் என இராணுவ ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

படையினர் நடத்திய தேடுதலின் போதே இந்தச் சடலம் மீட்கப்பட்டதாக இராணுவத் தகவல் நிலையம் தெரிவித்தது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எறிகணை வீழ்ந்து வெடித்ததில் மரக்கறி வியாபாரி மரணம்

## மற்றொருவர் காயமடைந்தார்

தென்மராட்சி, ஒக்.13

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற எறிகணைத் தாக்குதல்களின் போது வயோதிபப்பெண் ஒருவர் பலியானார். மற்றும் ஒருவர் காயமடைந்தார்.

கொடிகாமம் சந்தைக்கு அருகில் காளிகோயிலுக்கு முன்பாக எறிகணை வீழ்ந்து வெடித்ததில் சந்தை மரக்கறி வியாபாரியரன கந்தையா சின்னத்தங்கம் (வயது 68) என்பரே பலியானவராவார்.

கிராமாவில் பகுதியில் எறிகணை வீழ்ந்து வெடித்ததில் மீசாலை வடக்கைச் சேர்ந்த முத்துச்சாமி யோகன் என்பவர் காயமடைந்தார். இச்சம்பவத்தில் இவரது இரு பசுமாடுகள் பலியானதுடன் வீடும் சேதமடைந்தது -

பெண்ணின் சடலம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் நேறறு வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்ததையடுத்து நீதிவான் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டு சடலத்தை யாழ். போதனா மருத்துவமனை சட்ட வைத்திய அதிகாரியினால் பிரேத பரிசோதனை நடத்திய பின்னர் உறவினிடம் கையளிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# கொடிகாமம் பகுதியிலிருந்து மக்கள் நேற்று இடம்பெயர்வு

தென்மராட்சி, ஒக்.13

கொடிகாமம் பொலிஸ் நிலையச் சுற்றாடலில் உள்ள குடும்பங்கள் நேற்று வியாழக்கிழமை காலை தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை அப்பகுதியில் பரவலாக எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததையடுத்தே இம்மக்கள் வெளியேறியுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் கொடிகாமம் பகுதியில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் பல குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளன. அத்துடன் பயன்தரு மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன. பல இடங்களில் மின்சாரக் கம்பிகள் அறுந்து தொங்கிய நிலையில் காணப்படுகின்றன.

கொடிகாமம் கட்டைபறிச்சான் பிள்ளையார் நீராவியடியில் அடுத்தடுத்து வீழ்ந்த எறிகணைகளால் ஆலயத்துக்கும் பலத்த சேதமேற்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரப்பகுதி பாடசாலைகளுக்கு வருகை தந்த தென்மராட்சி கிழக்குப் பகுதிகளைச்சேர்ந்த மாணவர்கள் பலர் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்ததால், தமது வீடுகளுக்கும் செல்லமுடியாமல் சக மாணவ மாணவிகளின் வீடுகளில் தங்கியிருந்தனர். பிள்ளைகள் வீட்டுக்கு வராததால் நேற்று காலை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் பெற்றோர்கள் பிள்ளைகளைத் தேடிச் சென்று தமது வீடுகளுக்குக் கூட்டிச்சென்றனர்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய பகுதி களில் உள்ள அலுவலகங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் சிலர் தமது வீடுகளுக்கு செல்லமுடியாததால் அலுவலகங்களிலும் நண்பர்கள் வீடுகளிலும் தங்கிவிட்டு நேற்று காலை வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

இதேவேளை பரவலாக எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் கால்நடைகள் பல உடல் சிதறிப்பலியானதாவும் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

## கச்சாய், உசனில் இருவர் காயம்

தென்மராட்சி கிழக்கு கச்சாய், உசன் ஆகிய பகுதிகளில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் இரு பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

கொடிகாமம், கச்சாய் வீதி தேவாலயத்திற்கு முன்பாக வீழ்ந்த எறிகணை வெடித்ததில் கச்சாய் வடக்கைச் சேர்ந்த நாகன் ஐயாத்தம்பி (வயது-46) என்பவரும்.

உசன் கந்தசாமி கோயிலுக்கு அருகில் வீழ்ந்த எறிகணை வெடித்ததில் அதே இடத்தைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் கருணாநிதி (வயது -40) என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் யாழ். போதனாமருத் துவ மனைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

# மூவர் படுகொலை குறித்து ஈ.பி.டி.பி. அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ்.நகரில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மூவர் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து ஈ.பி.டி.பி. நேற்றிரவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்பேசும் மக்களின் விடுதலையின் பெயரால் புலித்தலைமையால் தொடரப்படும் படுகொலைக் கலாசாரம் என்பது தமிழ்பேசும் மக்களின் வாழ்வுரிமைக்கு அச்சுறுத்தலாகவும் அரசியலுரிமைக்கு தடையாகவும் இருந்து வருகின்றது. சொந்த இனத்தையே அழிக்கும் வகையில் மனித உயிர்களைப் பலியெடுத்து தெருவில் எறியும் கலாசாரத்திற்கு எதிரான ஜனநாயகத்தின் குரல்கள் பல தளங்களில் இருந்தும் கிளம்பி வருகின்றன.

புலிகளின் கொலை அச்சுறுத்தல்களினால் குரல்வளைகள் நசுக்கப்பட்டு நலிந்து போன எம்மக்கள் மத்தியில் துணிச்சலுடன் நின்று குரல் எழுப்பிவரும் எம் ஜனநாயகப் போராளிகள் பலரும் புலிகளின் தனித்தலைமையின் பாசிசத்திற்குப் பலியாகி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக எமது தோழர்கள் மூவர் யாழ். நகரில் கொலை வெறிக்குப் பலியாகியுள்ளனர். எமது கட்சியின் யாழ்.பிராந்திய பொதுசனத் தொடர்பாளர் தோழர் சதீஸ் என அழைக்கப்படும் ஆலாலசுந்தரம் சதீஸ்குமார் (வயது 24), தீவக அமைப்பாளர் தோழர் முகுந்தன் என அழைக்கப்படும் இராசையா விக்கினேஸ்வரன் (வயது 33), பொது சனத் தொடர்பாளர் தோழர் சுதா என அழைக்கப்படும் அருள்நாயகம் குணநாயகம் (வயது 26) ஆகியோர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர். மற்றும் எமது மூத்த உறுப்பினர் தோழர் காந்தன் படுகாயமடைந்திருக்கிறார்.

இதுபோன்ற படுகொலைகள் மட்டும்தான் விடுதலைப் போராட்டத்தை திசை வழி மாறி இழுத்துச் சென்ற பிரதான காரணி என்பதையும் இத்தகைய தனித்தலைமை வெறி மட்டும் தான் இன்றுவரை அர்த்தமுள்ள அரசியல் தீர்வுக்கு எதிராக எழுந்து நிற்கும் பாரிய தடைக்கல் என்பதையும் புலித்தலைமை இதுவரை உணர்ந்ததாக இல்லை.

உலக வரலாறெங்கும் அரங்கேறிய இது போன்ற அராஜகச் செயல்களை சம்பந்தப்பட்டவர்கள் தோல்விகளைச் சந்தித்திருந்த இறுதி அத்தியாயத்தில் கூட உணர்ந்து கொண்டதாய் இருந்ததில்லை.

மௌனத்தை கலைத்து மக்கள் ஒன்றுபட்டு எழுந்து பங்களித்தால் அந்த மாற்றங்கள் விரைவாக நிகழ்வது நிசமாகும். அழிவுகளில் இருந்த மக்கள் விரைவாக மீள்வதற்கும் இதுவே சிறந்த வழியாகும். கொல்லப்பட்ட எமது தோழர்கள் மக்களுக்காக உழைத்தவர்கள். மக்களின் மகிழ்ச்சியை மட்டும் கனவு கண்டவர்கள். அந்த கனவுகளை வென்றெடுப்பதற்காக தொடர்ந்து நாம் உறுதியுடன் உழைப்பதே நாம் எமது தோழர்களுக்கு செலுத்தும் மரியாதை ஆகும்.

கண்டனங்களும் கண்ணீர் அஞ்சலிகளும் மட்டும் இது போன்ற உயிர்க்கொல்லிகளின் கொடிய செயல்களுக்கு தீர்வு காணப் போதுமானவைகள் அல்ல. யுத்தமற்ற வாழ்வையும் அர்த்தமுள்ள அரசியல் தீர்வையும் எமது தேசத்தில் உருவாக்குவதன் மூலம் எமது மக்களின் பிரச்சினைகளில் சுயலாபங்களுக்காக ஒட்டிக்கொண்டு மக்களின் குருதி குடிக்கும் ஒட்டுண்ணிகளை அகற்றி விடுவதே [illegible] தில் உள்ளது.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### சரவணை அற்புதரத்தினம்

(இளைப்பாறிய இ.போ.ச. நடத்துனர்)

தாயின் மடியில் 01 - 04 - 1943 ஆண்டவன் அடியில் 13 - 09 - 2006

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்த குடும்பத் தலைவர் அமரர் சரவணை அற்புதரத்தினம் அவர்களின் பிரிவால் துயருற்றிருந்த எமக்கு ஆறுதல் கூறியும், இரங்கற் செய்திகள், கடிதங்கள், தந்திகள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசித் தொடர்புகள் மூலம் அனுதாபம் தெரிவித்தும் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள் பிரசுரித்தும், அன்னாரின் இறுதிக்கிரியை, அந்தியேட்டிக் கிரியை ஆகியவற்றில் கலந்து கொண்டவர்களுக்கும், இக்கிரியைகளில் வேண்டிய உதவிகள் செய்தவர்களுக்கும் எமக்கு வேறு பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உதய சூரியன் வீதி, உடுவில், சுன்னாகம். குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### இராசலிங்கம் ராஜ்மோகன்



எங்கள் உயிரே!
இன்று காற்றோடு கேட்டசெய்தி கனவென்றாவது இருந்திருக்கக் கூடாதா?
உனது உறவுகள் நாம் கலங்கி குமுறி அழுகின்றோம்.
தேறுதல் அடைய உன்னைப்பார்க்க வேண்டும் திரும்பி வந்திட மாட்டீரோ?
உனது நிமிர்ந்த பார்வையும் நடையும் அழகிய கட்டுடலும் மனிதாபிமான உள்ளமும் கொண்ட
எங்கள் பணியாளர் ராஜ்

இவரின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பதினருக்கு ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம். -சக பணியாளர்கள்.

# ஆங்கிலபாட ஆசிரியர்களுக்கு

தென்மராட்சி, ஒக்.13

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் ஆங்கிலப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளையும், நாளைமறுதினமும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

நிக்கொட் நிறுவன அனுசரணையுடன் நடத்தப்படும் இந்தச் செயலமர்வுக்கு அனைத்து ஆங்கிலபாட ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் மோகனகுமார்

(திருவள்ளுவர் ச.ச.நி. முன்னாள் பொருளாளர், மோகன் தையலகம், ஹலோ ரஸ்ற் ஊழியர்)



யாழ்ப்பாணம் மடம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் மோகனகுமார் நேற்று 12.10.2006 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சண்முகம் - பற்றிமா தம்பதியரின் அன்பு மகனும் சங்கரப்பிள்ளை - கண்மணி தம்பதியரின் பாசமிகு மருமகனும் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் றஷிகாவின் அன்புத் தந்தையும் கனகாம்பிகை, ஏகாம்பிகை, உலகாம்பிகை, மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

432/2, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி ஜெயவதனி ஜெயபதி (பாப்பா)



யாழ்.நீராவியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜெயவதனி (பாப்பா) அவர்கள் 12.10.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி இரத்தினம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் ஜெயபதியின் மனைவியும் ஸ்ரீதரன் (France), ஸ்ரீமோகன் (Germany), திருமதி ஜெயரோகினி செல்வரெத்தினம், ஸ்ரீகரன் (France), ஸ்ரீதாசன் (Norway) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலகுமாரி, நிர்மலாதேவி, வனஜா, அண்ணாமலை செல்வரத்தினம்(யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண் கலைக்கழகம்) ஆகியோரின் மைத்துனியும் பிரான்சைச் சேர்ந்த காலஞ்சென்ற நிதர்சினி, நிரோஷன், நிஷாந்தன், அபிராமிநிதா மற்றும் ஜேர்மனியைச் சேர்ந்த வினுஜா, பிரதீஸ், சுஸ்நிதா ஆகியோரின் அத்தையும் ஜனகன், பிரவீணா, வரவீணா ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 38, பிறவுண் வீதி,
முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்,(நீராவியடி)

தகவல்
திருமதி ஜெயரோகினி (சகோதரி)
அ.செல்வரத்தினம்
(மைத்துனர்).

## செல்லத்துரை சுந்தரலிங்கம்

(இளைப்பாறிய முன்னாள் அதிபர்-
அச்சுவேலி இரத்தினேஸ்வரி மகாவித்தியாலயம்)

யாழ்ப்பாணம் வளலாயைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்டவரும் அச்சுவேலி இரத்தினேஸ்வரி மகாவித்தியாலய இளைப்பாறிய முன்னாள் அதிபருமாகிய செல்லத்துரை சுந்தரலிங்கம் நேற்று (12.10.2006) வியாழக்கிழமை அதிகாலை இந்தியாவில் காலமானார்.

அன்னார் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியை சிவயோகத்தின் அன்புக் கணவரும் தயாளன் (லண்டன்), பாலமுரளி (கனடா), நளாயினி (லண்டன்) காலஞ்சென்ற சிவாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜீவகுமார் (லண்டன்), சுகிர்தா (லண்டன்), வாசுகி ஆகியோரின் பாசமிகு மாமனும், சானுஜனின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லண்டன்.

தகவல்:
தயாளன் (மகன்-லண்டன்).

## திருமதி பரமலிங்கம் இராஜேஸ்வரி

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமலிங்கம் இராஜேஸ்வரி காலமானார்.

அன்னார் பரமலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விசகடி வைத்தியர் (உடையார்) தம்பாப்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா - அன்னம்மா தம்பதியரின் மூத்த மருமகளும் சிவகரனின் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், சமூக சேவை மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்) அன்புத் தாயும் தனலட்சுமி, யோகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஞானேஸ்வரி, பாலசிங்கம், காலஞ்சென்ற கமலாம்பிகை, சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.


தகவல்:
குடும்பத்தினர்
(பரமலிங்கம் சிவகரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைல் விளாசினார் அதிரடி சதம்! மேற்கிந்தியத்தீவுகள் வெற்றி!!

ஜெய்ப்பூர், ஒக். 13

மினி உலகக் கிண்ணத் தொடரின் முக்கிய சுற்றுக்கு நடப்பு சாம்பியனான மேற்கிந்தியத்தீவுகள் சுலபமாக முன்னேறியது. நேற்றுமுன்தினம் நடந்த தகுதிச் சுற்று ஆட்டத்தில் பங்களாதேஷை 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியதன் மூலம் இத்தகுதியை மேற்கிந்தியத்தீவுகள் பெற்றது. கிறிஸ் கைல் அசத்தலாக சதமடித்து அணிக்கு மகத்தான வெற்றி தேடித் தந்தார்.



104 ஒட்டங்களை விளாசிய கிறிஸ் கைல்

இவ் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப வீரரான நபீஸ் முதல் பந்திலேயே பவுண்டரி அடித்து அசத்தினார். மறுமுனையில் அஷ்ரபுல் (2), ரெய்லரின் வேகத்தில் எல்.பி.டபிள்யூ., முறையில் ஆட்டமிழந்தார். 6 ஓவர்கள் வரை தட்டுத்தடுமாறி பங்களாதேஷ் ஓட்டங்கள் சேர்த்தது. பின்னர் அப்ரப் அஹமட் தாக்குதல் ஆட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டனர்.

அஹமட், நபீஸ் ஜோடியின் விளாசல் ஆட்டம், மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சற்று சிக்கலை ஏற்படுத்தியது. சிறப்பாக த் துடுப்பெடுத்தாடிய நபீஸ் (38), சாமுவேல்ஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் அப்ரப் அஹமட் அரைச் சதம் நிறைவு செய்தார்.

மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர்களான ஹசன் (0), பஷார் (0) அடுத்தடுத்து, கொலிமோரின் வேகத்தில் பவிலியன் திரும்பினர். இது போதாதென்று கடைசி




நம்பிக்கையாக இருந்த, அஹமட்டும் 59 ஓட்டங்களுக்கு சாமுவேல்ஸின் சுழலில் வெளியேறினார். இறுதியில் அந்த அணி 46.3 ஓவர்களில் 161 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

162 ஓட்டங்கள் என்ற எளிய இலக்குடன் மேற்கிந்தியத்தீவுகளின் தொடக்க வீரர்களாக கைல், சந்தர்போல் களமிறங்கினர். இவர்களுக்கு பங்களாதேஷின் பந்து வீச்சு பெரியளவில் நெருக்கடி கொடுக்கவில்லை. கடந்த சில ஆட்டங்களில் ஓட்டங்கள் குவித்துவரும் கைல் இவ் ஆட்டத்திலும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி சதம் அடித்தார். மறுமுனையில் சந்தர்போல் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்தார். இவர்களைப் பிரிக்க பங்களாதேஷ் பந்து வீச்சாளர்கள் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய கைல் ஒருநாள் அரங்கில் தனது 13 ஆவது சதத்தை(104) நிறைவு செய்தார். இதில் 11 பவுண்டரிகளும்,3 சிக்சர்களும் அடங்கும். சந்தர்போல் அரைச்சதம் (52) அடித்தார். இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 36.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 164 ஓட்டங்கள் எடுத்து, 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. (ர)

கிறம்லின் கிண்ண டெனிஸ்

# ஷரபோவா காலிறுதிக்குத் தகுதி



ஷரபோவா

மொஸ்கோ, ஒக்.13

டெனிஸ் உலகின் மூன்றாம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா தனது நாட்டில் இடம்பெற்றுவரும் கிறம்லின் கிண்ண டெனிஸ் போட்டியின் காலிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளார்.

அமெரிக்க பகிரங்க டெனிஸில் சம்பியனாகியிருந்த பின்னர் ஷரபோவா பங்குபற்றிய முதல் ஆட்டம் இதுவாகும். நேற்றுமுன்தினம் நடைபெற்ற இவ்வாட்டத்தில் சக வீராங்கனையான எலீனா பைச்கோவாவை எதிர்த்தாடிய அவர் 6:4, 7:5 என்ற நேர் செற்கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

இப்போட்டியின் தரநிலையில் ஷரபோவா 2ஆம் இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மற்றொரு இரண்டாம் சுற்று ஆட்டத்தில் முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான ரஷ்யாவின் சுவற்ல்னா குஸ்நெற்சோவா, சக வீராங்கனையான வீரா சோவனரீவாவிடம் 1:6, 3:6 என்ற நேர் செற்கணக்கில் தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டங்களில் வெற்றிபெற்ற நட்டியா பெட்ரோவா (ரஷ்யா), பற்றி சைண்டர்(சுவிற்ஸர்லாந்து) மற்றும் சமந்தா ஸ்ரோசர் (அவுஸ்திரேலியா) ஆகியோர் இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெற்றனர். (ர)


## 45ஆம் நாள் நினைவு தினம்



அன்பின் பிறப்பிடமாகவும் பாசத்தின்
உறைவிடமாகவும்
எங்களை அன்புடன் அணைத்தீர்களே
இருவரும் எங்களைத் தவிக்க விட்டு
எங்குதான் சென்றீர்களோ?



தோற்றம் 26.04.1948 தோற்றம் 24.11.1947

மறைவு 31.08.2006

### அமரர் பொ.சரவணலிங்கம்
### அமரர் திருமதி ச.தனேஸ்வரி

இன்று (13.10.2006) வெள்ளிக்கிழமை எங்கள் தற்காலிக இல்லத்தில் இடம்பெறும் அன்னார்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

தகவல்: ச.சிவரூபன்(மகன்)
இல. 54.படித்த மகளிர் திட்டம்,மிருசுவில்.
தற்காலிக முகவரி : சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

(54337)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### கதிராசிப்பிள்ளை பூரணலிங்கம்

தாயின் மடியில் 27.10.1927 இறைவன் மடியில் 24.09.2005

அன்பு காட்டிய அம்மாவே!
குடும்பத்தை வழிநடத்திய தலைவியே!
எமை வாழவைத்த அன்புத் தெய்வமே!
தினமும் நீங்கள் பேசிச் சிரித்த
நினைவுகளுடன் இருளில் நாமடைந்து
சோத்தில் ஓராண்டு கடந்ததம்மா!
உமது சிரித்த முகத்தை எங்கு தேடுவதம்மா!
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இல. 70, பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (54339) குடும்பத்தினர்.

## Patrician Institutes
### பற்றீஸியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

**தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

**ஆரம்பம் : 16.10.2006**

| | |
|---|---|
| A) ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION ONE YEAR |
| B) DIPLOMA IN MICRO SOFT OFFICE | DURATION 6 MONTHS. |
| C) DIPLOMA IN TYPE SETTING. | DURATION 3 MONTHS |
| D) DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING. | DURATION 4 MONTHS |
| E) DIPLOMA IN DEST TOP PUBLISHING. | DURATION 6 MONTHS. |
| F) DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. | DURATION 3 MONTHS. |
| G) INTERNET & E-MAIL. | DURATION ONE MONTH. |
| H) DIPLOMA IN INTERNET TECHNOLOGY. | DURATION 5 MONTHS. |

**CERTIFICATE COURSES**

01) MS WORD- 2000
02) MS EXCEL- 2000
03) MS ACCESS -2000
04) MS POWER POINT
05) VISUAL BASIC VER 6.5
06) PASCAL
07) d BASE III+
08) PAGE MAKER
09) WINDOWS 95
10) COREL DRAW
11) D BASE FOR WINDOWS
12) PHOTOSHOP DELUX
13) ADOBE PHOTOSHOP
14) QUICK BOOK

EACH 3 MONTHS

| | |
|---|---|
| 01) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (Pitman London Exam Paper மாதிரி வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 02) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| 03) மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol &Diesel வாகனங்களின் இலகுவான செய்முறை மூலம் கற்பிக்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 04) ஜெனரல் எலக்ரிஸன் (மின்சார இணைப்பு மோட்டார் றீவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| 05) வானொலி தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் (Oscilloscope அசைவு காட்டியினை கையாள்வதுடன் கூடிய முழுமையான பயிற்சியும் செய்முறையும்) | காலம் 8 மாதங்கள் |
| 06) கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி (on the job training வழங்கப்படும்) | காலம் 3 மாதங்கள் |
| 07) மின் ஒட்டுநர் பயிற்சி (ARC Welding & Gas Welding on the job traning வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 08) மரவேலை(With use of Machinery) (on the job traning வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 09) குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |
| 10) Plumbing | காலம் 6 மாதங்கள் |
| 11) Masonary | காலம் 6 மாதங்கள் |

### வாகனத் தகுதிச் சான்றிதழ் 2006

2006ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் தை மாதம் தொடக்கம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதனை அனைத்து வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு
1) பயிற்சிக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தலாம்.
2) வன்செயலால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் ஆதாரங்காட்டி பங்குக் குருவானவரின் (Parist Prist) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெறலாம்.
3) பயிற்சிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு

**Registrar**
**Patrician Institute**
*59, St. Patrick's Road, Jaffna.*
T.P: No. 021 222 6148
Fax: 021 222 6148
E-mail : spitee@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## G.A.Q பேராதனை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

* A/L இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள் ஆகும்.
* இப்பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக செய்து கொடுக்கப்படும்.
* புதிய பிரிவுகள் விரிவுரைகள் ஆரம்பம் : 14.10.2006.

குறிப்பு - சகல பிரிவுகளுக்கும் உரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன. காலை 8மணி.

விவரங்களுக்கு : புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

நிர்வாகி S.அருள்நங்கை.

(54268)



## G.A.Q. பேராதனை, யாழ்ப்பாணம்

பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பதிவுகள் யாவும் எம்மால் செய்து தரப்படும்.

G.A.Q., B.A. Part I, part II விரிவுரைகள் யாவும் 14.10.2006 சனிக்கிழமை ஆரம்பமாகும்.புதிய மாணவர்கள் இணைந்து கொள்ளலாம்.

நிர்வாகி.

## திகழ் கல்வி நிறுவனம்

கே.கே.எஸ். வீதி , இணுவில்

(C-51137)



## விதை தானியங்கள்

உடுவில், தெல்லிப்பழை, வேலணை, ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள விவசாயிகளை கீழ்க் குறிப்பிட்ட விதை தானியங்களின் தேவைகளைத் தாம் அங்கம் வகிக்கும் விவசாய சம்மேளனங்களினூடாக விவசாய விரிவாக்க உத்தியோகத்தரின் சிபார்சுடன் விண்ணப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

பயறு, உழுந்து, கௌபி, கச்சான், குரக்கன், எள்

* பொது அமைப்புகள் வீட்டுத்தோட்ட விதைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
FORUT மல்லாகம் & ஊர்காவற்றுறை

(54328)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 19 - 03 - 1962 உதிர்வு 14 - 09 - 2006

### அமரர் கதிரவேலு மகாதேவா

(ஆசிரியர் - யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

கடந்த 14.09.2006 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் சடங்கு நிகழ்வுகளில் பங்குபற்றி அனைத்து உதவிகளையும் வழங்கி எமது ஆறாத் துயரில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மந்துவில் மேற்கு, கொடிகாமம். (54299) தகவல்: குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பு

தோற்றம் 02 - 10 - 1939



மறைவு 13 - 09 - 2006

### அமரர் சின்னத்தம்பி அன்னம்மா

சீலங்களாற் சிறந்து உத்தமரானீர்
சிந்தையின் நன்நினைவுகளால் மேன்மையானீர்
ஆலமரம் போற் பரந்த உறவுகட்கெல்லாம்
அன்பெனும் நிழலீந்து அரவணைத்தீர்
ஓலமிட்டு நாமழுதே உளங்கலங்கவிட்டு
ஒரு கணத்தில் எமைப்பிரிந்து சென்றதேனோ?
காலங்கள் எத்தனைதான் ஓடிவிடினும்
கருத்தினில் தெய்வமெனப் போற்றுகின்றோம்.

கடந்த 13.09.2006 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் சின்னத்தம்பி அன்னம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.10.2006)வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

தகவல்:
மகன், பெறாமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள், மைத்துனி, சகோதரர்கள், குடும்பத்தினர்.

நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

(54253)

# மட்டு. அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை பகிஷ்கரிக்க தமிழ் எம்.பிக்கள் முடிவு

மட்டக்களப்பு, ஒக்.13

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தைப் பகிஷ்கரிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு கட்டடப் பொருள்கள், எரிபொருட்கள் உட்பட அத்தியாவசியமான பொருள்கள் பல தடை செய்யப்பட்டிருக்கின்றன. விவசாயப் பொருள்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதிக்கப்படுகின்றன. இந்நிலையில் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக நடத்தப்படுகின்ற கூட்டம் அர்த்தமற்றது என்று கூட்டைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்தார்.

"இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்களுக்கு பொருள்கள் செல்லவிடாமல் அரசு தடுத்து வைத்துள்ள நிலையில் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நாம் பங்குபற்றுவதால் எந்த நன்மையும் மக்களுக்குக் கிடைக்கப் போவதில்லை." - என்று அவர் கூறினார்.

(த-04)

# வகுப்பறையில் வைத்து ஆசிரியர் சுட்டுக்கொலை!

ஏறாவூர், ஒக். 13

வாழைச்சேனை - கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் நேற்றுமுன்தினம் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது வகுப்பறையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அம்பிலாந்துறையைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு நல்லையா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமப்போடி சிவஞானச்செல்வம் (வயது-32) என்பவரே இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த குறித்த ஆசிரியர் ஆபத்தான நிலையில் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது சிகிச்சை பயனளிக்காத நிலை யில் மரணமடைந்தார்.

சடலம் நேற்றுக் காலை வாழைச் சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. மரணவிசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கருணா குழுவினரே இந்த ஆசிரியரைச் சுட்டுக் கொன்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

(த-157-134)


## ஞானோதயா அக்கடமி

சங்கத்தானை

2007, 2008 A/L கலை, வர்த்தக அனைத்து வகுப்புகளும் வழமையான நேர அட்டவணைப்படி நாளை (14.10.2006) சனிக்கிழமை முதல் நடைபெறும்.

நிர்வாகி.



## பாலன் மில்ஸ்

தேங்காய்எண்ணெய், இலுப்பெண்ணெய், நல்லெண்ணெய்(எள்) போன்ற (3கிலோவிலிருந்து ஆயிரம் கிலோ வரை) எண்ணெய் வகைகளை நவீன இயந்திரத்தில் வடித்துக்கொள்ள உடன் நாடவேண்டிய இடம்.

"பாலன் மில்ஸ்"
மாவடிச்சந்தி - வட்டுக்கோட்டை.
கஜலக்சுமி அரிசி ஆலை,
வட்டுக்கோட்டை.
T.P:0602212624

(54191)



## திகழ் கல்வி நிறுவனம்

K.K.S. வீதி, இணுவில்

### A/L DAY CLASS

கலை, வர்த்தகப் பரிவுகள்
ஆரம்பம்: 14.10.2006 7a.m.

| | |
|---|---|
| தமிழ் M.சுரேஸ் | கணக்கீடு வின்சன் |
| இ.நாகரிம் சத்தியதாசன் | அளவையியல் கமல் |
| பொருளியல் P.சண் | நா/ அரங்கியலும் I.சத்தியா |
| புவியியல் S.கிருஸ்ணா | அரசியல் T.திருமுருகன் |
| வணிகக்கல்வி சாந்திநாதன் | வரலாறு பத்மன் |

2008, 2007 PAPER CLASS
நடைபெறுகின்றன.


## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 22 - 10 - 1978



இறப்பு: 13 - 10 - 1998

திதி: 13-10-2006

### ஸ்ரீஸ்கந்தராஜா சுகந்தினி

(யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி - கொழும்புத்துறை)

உன்னைச் சுமந்த வயிறு
இன்னும் எரிகிறது!
உனைத் தாங்கிய தோள்கள்
இன்னும் வலிக்கிறது!

உன்னோடு பகிர்ந்துண்ட உணவு
இன்னும் செரிக்கவில்லை!
நீ நடந்த நிலத்துமண்
இன்னும் சூடாறவில்லை!

இதுபது ஆண்டுகள்
எம் இதயத்தை ஆண்டாய் நீ!
இன்னும் எத்தனை ஆண்டுகள்
உன் நினைவுகளை நாம் சுமப்போம்?

உன் நினைவுகளைச்
சுமந்து வாழும் நாங்கள்!

துயரோடு தகவல்:
அப்பா, அம்மா, சித்தி,
சித்தப்பா, சகோதரர்கள், மாமா.

கொழும்பு - 06.

(C-51119)

## 15 ஆம் வருட நினைவுநாள்

தோற்றம் 17 - 03 - 1935



மறைவு 13 - 10 - 1991

### திருமதி ஞானம்மா இம்மானுவேல்

அன்பின்திருவுருவே!
எங்கள் அன்பான அம்மாவே!
நீங்கள் மறைந்து பதினைந்து ஆண்டுகள்
சென்றாலும் நாங்கள் என்றும்
உங்களை மறவோம்.

க.நவரத்தினம் (மைத்துனர்),
இல.4, கோயில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(54325) குடும்பத்தினர்.

## நெஞ்சைவிட்டகலா 45ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 01 - 07 - 1939



விண்ணில் 31 - 08 - 2006

### அமரர் கோவிந்தபிள்ளை சரவணமுத்து

31.08.2006 வியாழக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கோவிந்தபிள்ளை சரவணமுத்து அவர்களின் சபிண்டீகரண நிகழ்வுகள் நாளை(14.10.2006) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப. 10 மணியளவில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் இடம்பெறும். இந் நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பருத்தித்துறை வீதி,
நாவற்காடு, வரணி

(54321)

தகவல்:
பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 08 - 06 - 1924



ஆண்டவன் அணைப்பில் 25 - 09 - 2005

### அமரர் கணபதிப்பிள்ளை தங்கராஜா

( ஓய்வுபெற்ற நெசவு மின்தறி நிலையப் பொறுப்பதிகாரி)

திதி: 14.10.2006

பாசமுடன் எமைவளர்த்து
பல்கலையும் கற்க வைத்து
நல்வாழ்வு நாம் வாழ
நல்வழிகாட்டிய தெய்வமே!
பாரினில் எமைத் தவிக்கவிட்டு
பாதி வழியில் பிரிந்ததேனோ?
காலமெல்லாம் உங்கள் நினைவுடனே
கார்த்திகேயன் பாதம் பணிந்திடுவோம்.

பத்திரகாளி கோயில் ஒழுங்கை ,
பருத்தித்துறை

(54300)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை கட்டாயம் தேவை

## பரீட்சை ஆணையாளர் எதிரிசிங்க அறிவிப்பு

அச்சுவேலி,ஒக்.13

ஜி.சீ.ஈ. சாதாரண தரம், ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை அத்தாட்சிப்படுத்துவதற்கு, ஆள்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளை மட்டுமே இந்த வருடத்தில் இருந்து சமர்ப்பிக்கவேண்டும் என பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

16 வயது பூர்த்தியடைந்த மாணவர் விடயத்தில் தேசிய அடையாள அட்டை கட்டாயம் என வலியுறுத்தப்பட்டிருப்பதோடு 16வயது பூர்த்தியடையாத மாணவர்கள் தபால் திணைக்களத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டையைப் பயன்படுத்தலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள் 16 வயது பூர்த்தியடைந்த மாணவர்களின் தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்குரிய விண்ணப்பங்கள் உரிய முறையில் பூரணப்படுத்தி பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் மூலப்பிரதி, போட்டோப்பிரதி இரண்டையும் இணைத்து ஒக்ரோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் ஆள் பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டையை பெறுவதற்கான விண்ணப்பங்கள் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு நேரடியாக அனுப்பிவைக்கப்படவேண்டும். (ப-11)

# கோழிநோய்த் தடுப்பு மருந்துகளை கப்பலில் தருவிக்க முயற்சி

வடமராட்சி,ஒக்.13

கோழிகளுக்கான தடுப்பு மருந்தினை கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவர யாழ்.பிராந்திய சுகாதார கால்நடை உற்பத்தித் திணைக்களப் பணிப்பாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

கடந்த 10 வருடங்களாக குடாநாட்டிலுள்ள அரசினர் கால்நடை வைத்திய நிலையங்கள் ஊடாக கோழிகளுக்கு நோய் பரவாமல் தடுப்பதற்கு காலத்துக்குக் காலம் தடுப்பு மருந்து வழங்கப்பட்டு வந்தது.

தற்போது கோழிகளுக்கான தடுப்பு சொட்டு மருந்து தீர்ந்து விட்டதால் வளர்க்கப்படும் கோழிகளுக்கு தடுப்பு மருந்து வழங்க முடியாத நிலை இருந்து வருவதை அடுத்தே கொழும்பிலிருந்து தருவிக்கப்படவுள்ளது.

# சுனாமி பாதித்த மாணவர்களுக்கு இலசவமாக துவிச்சக்கரவண்டிகள்

## உலக தரிசன அமைப்பு வழங்கியது

வடமராட்சி,ஒக்.13

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கற்கோவளம் தொடக்கம் அம்பன் வரையான பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு உலக தரிசன (வேள்ட் விஷன்) நிறுவனத்தால் சுனாமி நிவாரணத் திட்டத்தின் கீழ் இலவசமாக சைக்கிள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதிகளைச் சேர்ந்த 7 பாடசாலைகளில் கல்வி பயிலும் 500 மாணவர்களுக்கு இவ்வாரம் முதல் வடமராட்சி கல்வி வலயம் அமைந்துள்ள புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் வைத்து பாடசாலை வாரியாக மாணவர்கள் அழைக்கப்பட்டு அந்தந்தப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னிலையில் சைக்கிள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த 124 மாணவர்களுக்கும், குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த 47 மாணவர்களுக்கும் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த 53 மாணவர்களுக்கும் குடத்தனை கரையூர் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த 34 மாணவர்களுக்கும் கடந்த இரு தினங்களில் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

ஒதுக்கீடு செய்யப்பட்ட 500 சைக்கிள்களில் மிகுதியானவை அடுத்துவரும் வாரங்களில் குடத்தனை அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் பாடசாலை, இடம்பெயர்ந்து புனித நகரில் நகரில் இயங்கி வரும் நாகர் கோயில் மகா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப)

# பாண்விலையில் மாற்றம் இல்லை பேக்கரிச் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ்.மாவடத்தில் பாண் விலையில் எந்த வித மாற்றமும் இல்லை என யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

450கிராம் நிறையுடைய ஒரு இறாத்தல் பாணியின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலை 28 ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறி கூடுதலான விலையில் விற்பனை செய்யும் வியாபார நிலையங்களுக்கு பாண் விநியோகம் நிறுத்தப்படும் எனவும் சங்கம் தெரிவித்துள்ளது. (202)

# கல்வி நிர்வாக சேவை தரம் III நேர்முகப்பரீட்சை நவம்பரில்

அச்சுவேலி,ஒக்.13

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III பதவிக்கு ஆள்களைச் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் நவம்பர் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் நடத்தப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் உயர் புள்ளி பெற்றவர்கள் அரசநிர்வாக ஸ்தாபன கோவை விதிகளின் பிரகாரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

பரீட்சை முடிவுகள் உரிய முறையில் வெளிப்படுத்தப்படாமல் 400 இற்கு மேற்பட்டவர்களுக்கு நேர்முகப்பரீட்சைக்கு தயாராகுமாறு முன்னறிவிப்பு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டு நேர்முகப்பரீட்சை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டதை ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கண்டித்ததுடன் கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தன. இதையடுத்து நேர்முகப்பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டன.

ஒத்திவைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைகளை ஸ்தாபன கோவை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நேர்முகப்பரீட்சைகள் நவம்பர் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளன. கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை (மட்டுப்படுத்தப்பட்டது) முடிவுகள் தனித்தனியாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (ப)

# வழமையான நேர அட்டவணைப்படி சகல பாதைகளிலும் பஸ்சேவை

## வ.பி.போ.ச. பொதுமுகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.13

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் யாழ்.குடாநாட்டில் நடத்தப்பட்டு வரும் பஸ்சேவைகள் தற்பொழுது நடைமுறையில் உள்ள நேர ஒழுங்குக்கேற்பவே நடைபெறும் என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் க.கணேசபிள்ளை உதயனுக்குத் தெரிவித் தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்:-

யாழ்.குடாநாட்டில் சகல பாதைகளிலும் ஊரடங்கு தளர்த்தப்பட்டு 15 நிமிடங்களின் பின் - காலை 6.15 மணிக்கு - சேவை ஆரம்பிக்கப்படும். மாலை 4.30 மணிக்கு கடைசி பஸ் புறப்படும்.

ஆயினும் கொடிகாமம்,பருத்தித்துறை காரைநகர் போன்ற இடங்களுக்கான பஸ் சேவை 4 மணியுடன் நிறுத்தப்படும்.

இதேவேளை -

பாடசாலை நாள்களில் மாணவர்களின் வசதிகருதி பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னதாகச் சென்றயடைக் கூடியதாக பாடசாலை பஸ்சேவைகள் நடத்தப்படும் - என்றார். (202-88)

# பசுமாடு யாருடையது?

யாழ்ப்பாணம்,ஒக்.13

சிவப்புநிற பசுமாடு ஒன்று கடந்த மாதம் 24ஆம் திகதி பருத்தித்துறை வீதி இரண்டாம் ஒழுங்கையில் உள்ள சீரடி பாபா ஆலயத்தில் தஞ்சமடைந்துள்ளது என்று ஆலய நிர்வாகி தெரிவித்துள்ளார்.

இதனை அப்பகுதி கிராம அலுவலரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் மேலும் கூறினார். (203)

# சிறுவர் பிரச்சினைகளைத் தீர்க்க கனேடிய உதவி குறித்து ஆராயப்படும்

நல்லூர்,ஒக்.13

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறுவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முகம்கொடுக்கும் சிக்கல்களைத் தீர்த்துவைக்க கனடா நாட்டின் தூதரகத்தின் ஊடாக செய்யக்கூடிய வழிமுறைகளை ஆராய்ந்து செய்துதர முயற்சிப்பதாக கனேடிய தூதரகத்தின் உதவி வழங்கலுக்குப் பொறுப்பான பிரதிநிதி ஜொனதன் லிட்க் கொரப்ட் சிறுவர் மகிழ்வகத்தில் நடைபெற்ற சந்திப்பின்போது தெரி வித்தார்.

வடமாகாண சீடா நிறுவன செயல் திட்டத்தின் பொறுப்பாளர் ரி.ரி.மயூரன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்டத்தில் சிறுவர் தொடர்பான செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் சீடா நிறுவனத்தின் பிரதிநிதிகள் அதனுடன் பங்காளிகளாகச் செயற்படும் நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி சிவராஜா,வேல்ட் விஷன், விழி நிலையம், சுகவாழ்வகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் உட்பட மனிதாபிமானப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் உள்ள இடர்பாடுகள் குறித்து பிரதிநிதிகள் விரிவான விளங்கங்களை எடுத்துரைத்தனர். உணவு, கல்வி, சுகாதாரம், ஆகிய முக்கிய பிரச்சினைகளிலும் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் - குறிப்பாக சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் - குறித்தும் ஆராயப்பட்டது. (ப-111)



சிறுவர் மகிழ்வகத்தில் சிறுவர்கள் மற்றும் அரசார்பற்ற நிறுவனங்கள் தமது செயற்பாடுகளில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின்போது கனேடிய உயர்ஸ்தானிகராலய உதவி வழங்கலுக்குப் பொறுப்பான பிரதிநிதி ஜொனதன் லிட்க் கொரப்ட், யாழ்.மாவட்ட சீடா நிறுவனத் திட்டப் பொறுப்பாளர் ரி.ரி.மயூரன் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உரையாடிக்கொண்டிருக்கிறார்கள். *(படம் : நல்லூர் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

வடமராட்சி,ஒக்.13

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் சந்நியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை மாணவர்களின் நிகழ்வு இடம்பெறும்.

# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., ஏழாலை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுகின்றன என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு - I, வகுப்பு 2-I, வகுப்பு 2-II ஆகியவர்களிடமிருந்தும்(பட்டதாரிகள்) இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு - I, வகுப்பு 2-I,(பட்டதாரிகள்),வகுப்பு 2-II (பயிற்றப்பட்ட பட்டதாரிகள்) ஆகியோரிடமிருந்து இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (203)

# தீவக ஆசியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

தீவக ஆசிரியர் சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் அமைப்புக் குழுவினர் கேட்டுள்ளனர்.(202)

# கைத்தொழிலாளருக்கான ஜனாதிபதி விருதுக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம்,ஒக்.13

கிராமிய கைத்தொழில் சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சால் ஒழுங்கு செய்யப்படும் 2006 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதி விருதுக்கு கைத்தொழில் முயற்சியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை இது குறித்து அறிவித்துள்ளது.

சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் முயற்சியாளர்கள், கைத்தொழில் துறையில் சுயதொழில் புரிவோர் ஆகியோர் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவங்களை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்டக் காரியாலயங்களில் பெற்று எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்யது சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 'யாழ்.மாவட்டக் காரியாலயம்,கைத்தொழில் அபிவிருத்திச் சபை,வீடமைப்பு அதிகார சபைக் கட்டடம், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்' என்ற முகவரியில் விண்ணப்பப்படிவங்களையும் இது தொடர்பான மேலதிக விவரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். (203)

## எட்வேட் மேக்ஸ் தயாரிப்பு

**கரப்பன், சிரங்கு**

*மற்றும் எவ்வகைப் புண்களையும் ஆற்றவல்ல*
*சிவப்புநெய்* (RED OINTMENT)
*சில்லறையகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்*

**டாக்டர் ஜி.எட்வேட்** L.A.M.P., R.I.M.P.

**கபிரியேல் எட்வேட் வைத்தியசாலை**

*24, பஸ் நிலையம் கிழக்கு*
*பெரிய கடை, யாழ்ப்பாணம்.*


## கொழும்பு சென்ற வர்த்தகரைக் காணவில்லை

கல்வியங்காடு,ஒக்.13

கடந்த ஒகஸ்ட் 11ஆம் திகதிக்கு முன்னர் வர்த்தக நோக்கமாகக் கொழும்புக்குச் சென்றவரை காணவில்லை என அவர்களது உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

தேவதாசன் கமலதாசன்(வயது26) என்ற வர்த்தகரைப் பற்றி இதுவரை எவ்வித தொர்புகளோ தகவல்களோ தமக்குக் கிடைக்கவில்லை என அம்முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-79)


## Jaffna Study Center of Colombo Theological Seminary

**கொழும்பு இறையியல் கல்லூரி, யாழ்.நிலையம்**
*கிறிஸ்தவ ஊழியர் பயிற்சிநெறி*

**பாடம்:-** இஸ்ரவேல் சமயமும் ஆசாரியத்துவமும் (Festivals & Priesthood of Israel)
**விரிவுரையாளர்:-** வண.ஜேசன் செல்வராஜா
**திகதி:-** ஒக்ரோபர் 16-20 வரை, காலை 8.30-2.00 மணிவரை
**இடம்:-** C.T.S-Jaffna Center, 32/1, விதானையார் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்.நகர்.

ஒப்படைகள் முதல் நாள் வகுப்பில் ஒப்படைக்காத மாணவர்கள் வகுப்பில் அனுமதிக்கப்படமாட்டார்கள். (54330)



## மானிப்பாயில் கணனிக் கல்வி

கீழ்வரும் புதிய கணனி வகுப்புக்கள் ஆரம்பம்
(வகுப்புக்கள் யாவும் ஒரு மாதகால முழுநேர வகுப்புக்கள் ஆகும்)

Diploma in Computerized Accounting Packages (ACCPAC & Quick Book & MYOB & Tally)
Diploma in Desktop publishing (Pagemaker & Photoshop & CorelDraw)
Diploma in Video & AudioMixing (Pinnacle & Cool3D & Xara3D &VCD Cutter & Photoshop & Sound Forge )
Diploma in Microsoft Office (FICT & Word & Excel & Access & PowerPoint & Internet e -Mail)
Diploma in Computer Programming (VB – 6 & Dot Net & C++ & Java)

யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய கணனிப் பயிற்சி நிறுவனங்களை விட மிகக்குறைந்த கட்டணம் மட்டுமே அறவிடப்படும்.
உங்கள் பதிவுகளை 16.10.2006ற்கு முன்னர் மேற்கொள்ளவும். அனைத்து வகுப்புக்களும் 16.10.2006. அன்று ஆரம்பம்.
பெரியோர்களுக்கான தனிப்பட்ட கணனி வகுப்புக்களும் ஆரம்பமாக உள்ளதால் பெரியோர்களும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

குறிப்பு :- கணனி வகுப்புக்கள் யாவும் கணனி மென்பொருள் வடிவமைப்புத் துறையில் சாதனை படைத்த அதி உயர் திறமை வாய்ந்தவர்களால் மட்டும் நடாத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும்
**UNI TECHNOLOGY**
**ICT Education Trainers**
**Manipay**
( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )


# ஒற்றையாட்சியை கடந்த பார்வை?

இலங்கை தேசிய சமாதான பேரவையால் அண்மையில் தேசிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பீட்டின் படி 51% மானோர் சமாதானத் தீர்வானது ஒற்றையாட்சிக் கோட்பாட்டுக்கு அப்பால் செல்ல வேண்டுமெனக் கூறியுள்ளனர். இக் கணிப்பீட்டில் 49% மான சிங்களவர்களும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளனர்.


34% ஆனோர் மட்டுமே தற்போதைய பிரச்சினைக்கு ஒற்றையாட்சியே தீர்வாக அமையுமென நம்புகின்றனர். 38% மான சிங்களவர்களும் இதனையே தெரிவித்துள்ளனர்.

கருத்துக் கணிப்பின் படி 24% மானோர் மட்டுமே சமஷ்டியாட்சி எனும் கருத்தியலை ஓரளவாவது தெரிந்தவர்களாக உள்ளனர். அவர்கள் அதனை பிரிக்கப்படாத நாட்டினுள்ளே அதிகாரப் பகிர்வை வழங்குவதாகக் காண்கின்றனர். பெரும்பான்மையான, 62% மக்கள் சமஷ்டி முறை அரசாங்கம் என்ன என்பது பற்றிய விளக்கமற்றவர்களாக இருக்கின்றனர்.


14% மானோர் நாட்டை பிரிக்கின்ற ஒன்றாக இதனைக் கருதுகின்றனர். இதனடிப்படையில் மிகச் சிறிய எண்ணிக்கையிலான சிங்கள மக்கள் மட்டுமே இதன் மூலம் நாடு பிளவுபடும் என கருதுகின்றனர். உதாரணம் அம்பாந்தோட்டையில் 20%ம் அனுராதபுரத்தில் 13%ம் இக்கருத்தை கொண்டுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது.

தேசிய சமாதான பேரவை இவ் விடயங்கள் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டல் செய்து வருகின்றது. அதே போன்று அரசியல் கட்சிகளும் ஏனைய தரப்பினரும் மக்களை அறிவூட்டும் விடயத்தில் ஒன்றுபட வேண்டும்.

**அரசியல் தீர்வை அடைய பெரிதும் உதவும் அரசியல் வழிமுறை யாது என கருதுகிறீர்கள்?**




**சமஷ்டி பற்றி உங்களுக்கு தெரிந்தவை எவை?**






**சமாதானத்துக்காக அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை மக்கள் ஏற்கத் தயாராக உள்ளனர்.**

**தற்போதைய பிரச்சினைகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவோம்.**

இக் கருத்துக்கணிப்பு இலங்கை தேசிய சமாதான பேரவையின் வேண்டுகோளின் படி மார்கா நிறுவனத்தினால் 2006 ஜுன், ஜுலை மாதத்தில் கொழும்பு, கம்பஹா, நுவரேலியா, அம்பாந்தோட்டை, அனுராதபுரம், களுத்துறை, புத்தளம், திருகோணமலை, மொணராகலை, அம்பாறை, கண்டி இரத்தினபுரி, வவுனியா ஆகிய 10 மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 5000 பேர்களிடமிருந்து பெறப்பட்டன.

தயவுசெய்து தங்களுடைய கருத்துக்களை எமக்கு எழுதவும்

**இலங்கை தேசிய சமாதான பேரவை**
12/14, புராண விகாரை வீதி, கொழும்பு 6
தொலைபேசி: 2818344, 2854127, 2809348

## 59 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்



தாயின் மடியில்
13.10.1947

முருகன் திருவடியில்
19.07.2006

அமரர்
## இரத்தினசபாபதி ஸ்ரீ நடராஜா
**(பத்திரிகையாளர்)**

கற்றோரும் பெற்றோரும் போற்றும் வண்ணம்
காவியத்தில் சிறப்புடனே வாழ்ந்து
பொல்லாங்கைப் போக்கி நல்வழியைக் காட்டிய
அன்புச் சகோதரனே நினைக்கின்றோம் இந்நாளில்

உன் அன்புச் சகோதரிகளின்
மதிவளம் மிக்க மழலைச் செல்வங்களை
அன்போடு அளவளாவி இன்புற்ற நன்நாளை
நினைக்கின்றோம் இந்நாளில்

கம்பீரம் உன் தோற்றமதில் கணீர் என்ற குரல் வளமும்
அதிரடியாய் பேசி கவர்ந்திடும் உன் பேச்சு வன்மை
ஆணவத்திற்கு அடி பணியா உன் தன்மானம்
இவை அனைத்தும் எம் நினைவில் நிற்குதையா.

உம் அகவை ஐம்பத்தொன்பதாவதின் நினைவதனில்
முருகன் பாதம் அடி பணிந்து
இதயங்கொண்ட ஆசிமலர்கள்
இத்தால் யாங்கள் தூவி
ஆசிக்கின்றோம் இந்நாளில்.

காலனவன் கட்டளையால் வானுலகம் சென்றிடினும்
ஞாலத்தின் மணி விளக்காய் ஒளிந்திட்ட அன்புச் சோதரன் நீ
உன் கோலத் திருவுருவம் என்றுமே
எங்கள் மனதை விட்டு அழியாத
ஒப்பற்ற சித்திரமே.

தகவல்:
திருமதி சகுந்தலா யசோதரன்
(தங்கை,பிரான்ஸ்),
அரச வீதி,
உரும்பிராய்.

**உன் அன்புத் தங்கைகள்,**
**மைத்துனன், மருமக்கள்,**
**பெறாமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் இரத்தினவேல் (J.P)

**(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் (O.A.), கச்சேரி, யாழ்ப்பாணம்)**



தாவடியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கு, அரச வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராச ரத்தினம் இரத்தினவேல் நேற்று (12.10.2006) வியாழக்கிழமை திருகோணமலையில் கால மானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் யோகேந்திரா (லண்டன்), சகிந்தா (ஆஸ்திரேலியா), தேவதா (ஆஸ்திரேலியா), பிறேமதா (ஆசிரியை, திருகோணமலை), திலகா (ஆசிரியை, உரும்பிராய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் வத்சலா, யோகநாதன், சிவதாஸ், சிறிகாந்தா (மின் அத்தியட்சகர், மின்சாரசபை - திருகோணமலை) விமலநாதன் (ஆசிரியர், மன்னார்) ஆகியோரின் அன்பு மாமனும் சங்கீத், அபினாஸ், ரஜீவன், இலக்சனா, குசலவன், விசாகன், நதீசன், மதுரா, கிரித்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும் நல்லையா, காராலசிங்கம், காலஞ்சென்ற முத்துக்குமாரு, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் சு.விஜயசிங்கம் (மலேசியா), எஸ். பரமசிவம் (மலேசியா), எஸ்.சிவநேசன், எஸ்.காசிநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.10.2006 செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திருகோணமலையிலுள்ள அவரது மகளின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுட்ல் தகனக் கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*23, சணல் லேன்,*
*திருகோணமலை.*

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# ஊடக சுதந்திரத்தைப் பறிப்பது தீர்வுக்கு முட்டுக்கட்டை போடும்

பத்திரிகைத்துறைக்கு - குறிப்பாகத் தமிழ்ப் பத்திரிகைகளுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் - இன்று நேர்ந்துள்ள அவல நிலைக்கு இலங்கை அரசு மீது குற்றம் சுமத்தியிருக்கின்றது இலங்கை வந்துள்ள சர்வதேசப் பத்திரிகை அமைப்புக்களின் ஐவர் கொண்ட பிரதிநிதிகள் குழு.

நாட்டுப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினராலும் - குறிப்பாக துணை இராணுவப் படையினராலும், ஆயுதக் குழுக்களினாலும் - ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப் படுகின்றார்கள்; கடத்தப்படுகின்றார்கள்; பத்திரிகை விநியோகம் வன்செயல் மூலம் தடை செய்யப்படுகின்றது. பத்திரிகையாளர்கள் - அதுவும் பெரும்பாலும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் - கொல்லப்படுகின்றார்கள். கடந்த சில மாதங்களாக எட்டுக்கு மேற்பட்ட ஊடகத் தொடர்பாளர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். சில கொலைகள் குறித்து ஆதாரங்கள் இருந்தும் கொலைகாரர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. - இவ்வாறு சர்வதேச பத்திரிகை அமைப்புகளின் பிரதிநிதிகள் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் பகிரங்கமாகவே சுட்டிக்காட்டி விசனம் தெரி வித்திருக்கின்றனர்.

இந்தளவுக்கு ஊடகச் சுதந்திரம் சீர்கெட்டிருப்பது புதிய அதிகார மையம் தென்னிலங்கையில் ஆட்சிப் பீடம் ஏறிய பின்னர்தான் என்பது கவனிக்கத்தக்கது.

'மனித உரிமைகளுக்காகப் போராடும் போராளி' என்று தனது கடந்த கால அரசியல் குறித்து அதிகம் பீற்றிக் கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர்தான், ஊடகங்களுக்கு எதிராகக் கொடூரம் இழைக்கும் - எண்பதுகளின் பிற்பகுதியிலும், 90களின் முற்பகுதியிலும் நிலவியது போன்ற - இருண்ட யுகத்தை நோக்கி நாடு திரும்பிக் கொண்டிருக்கின்றது; ஊடக உரிமை மோசமாக மீறப்படுகின்றது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - நிரந்தரமான, நிலைத்து நீடிக்கக் கூடிய தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முயற்சிகள் குறித்து அதிகம் பேசப்படும் காலம் இது.

அத்தகைய நிலையான சமாதானத்தை உருவாக்குகின்ற பேச்சு மூலமான தீர்வை எட்டுவதற்கும், ஜனநாயக சமுதாயத்தைப் படைப்பதற்கும் முக்கியமான அம்சங்களுள் ஊடகச் சுதந்திரமும், கருத்துத் தெரிவிக்கும் உரிமையும் அடிப்படையானவை.

ஆனால், அமைதித் தீர்வுக்கான தேடுதல் வலுப்பெற்றிருக்க வேண்டிய இந்தச் சந்தர்ப்பத்தில்தான், அதற்கு அடிப்படையான கருத்துச் சுதந்திரமும், ஊடகச் சுதந்திரமும் இந்தத் தேசத்தில் மிக மோசமாகப் போட்டு மிதிக்கப்படுகின்றன. இது இலங்கைத் தீவைப் பீடித்த துரதிஷ்டமின்றி வேறில்லை.

இலங்கை வந்த சர்வதேச பத்திரிகை அமைப்புகளின் பிரதிநிதிகள் குழு, தமிழ்ப் பத்திரிகைகள் அடக்கி ஒடுக்கப்படுவது குறித்து விசேடமாகக் கவனம் செலுத்தியிருக் கின்றது. விசேடமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பத்திரிகைகள் மோசமாக அடக்கப்படுகின்றன என்றும், இதனால் வடக்கு - கிழக்கில் சுதந்திரத் தகவல் பரிமாற்றம் மட்டுப்படுத்தப்பட்டு விட்டது என்றும் அக்குழு விசனம் தெரிவித்திருக்கின்றது. இந்தப் போக்கு ஸ்திரமற்ற நிலைமையையும்,சண்டையையும் மேலும் தீவிரமடைய வைத்திருப்பதாக அக்குழு குறைப்பட்டுக் கொண்டது.

உண்மையிலேயே அமைதி வழியில் - பேச்சு மூலம் - நியாயத் தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டுமானால் -

இனப்பிரச்சினையில் பாதிக்கப்பட்ட தரப்பின் கருத்துகளும், குரலும் அச்சமின்றியும், சுயாதீனமாகவும், மட்டுப்படுத்தல்களுக்கு உட்படாமலும் வெளிவர வேண்டும். பாதிக்கப்பட்ட தரப்பின் குரல்வளையைத் தொடர்ந்து நசுக்கி வைத்துக்கொண்டு நியாயமான இணக்கப்பாட்டைக் காண்பது என்பது சாத்தியமற்றது. அது அபத்தத்திலேயே முடியும்.

இங்கு தேசிய இனப்பிரச்சினையில், பாதிக்கப்பட்ட - ஆதங்கத்துக்கு உள்ளான - உரிமை மறுக்கப்பட்டவர்கள்தாம் என்று கருதுகின்ற - தரப்பு எது?

தமிழ்ப் பேசும் மக்கள்தான் அத்தரப்பினர்.

எனவே, இனப்பிரச்சினைக்கு நியாயமான இணக்கத் தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமானால், அந்தப் பாதிக்கப்பட்ட தரப்பின் குரலும், கருத்தும் - உள்ளக் கிடக்கையும், எதிர்பார்ப்பும் - நோக்கமும், அபிலாஷைகளும் - அடக்கப்படாமல் சுயாதீனமாக வெளிவர வேண்டும்; வெளிப்படுத்தப்பட வேண்டும்.

அதாவது, பாதிக்கப்பட்ட தரப்பின் கருத்து வெளியிடும் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டால்தான், நியாயமான தீர்வு குறித்து ஆலோசிக்கவும், அதை எட்டுவதற்கான வழிவகைகளை நாடவும் வழி பிறக்கும்.

ஆனால், இங்கோ, பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்கள் மத்தியிலிருந்து அவர்களது கருத்து வெளிப்பாடாகத் தோற்றும் தமிழ் ஊடகங்களே அடக்கப்படுகின்றன; அவற்றின் குரல்வளை நசுக்கப்படுகின்றது. அதன் மூலம், தமிழர் தரப்பின் சுயாதீனக் கருத்துகள் அடக்கப்படுகின்றன.

தம்மை அடக்கியவர்கள் என்று தமிழர்களால் கருதப்படுபவர்கள் தென்னிலங்கை ஆட்சியாளர்கள். அந்த ஆட்சியாளர்களின் கருத்தும், விருப்பமும், நிலைப்பாடும் மாத்திரமே தமிழ்ப் பேசும் மக்களின் அபிலாஷைகளாகவும், எதிர்பார்ப்பாகவும் வெளிப்படுத்தப்பட வேண்டும் எனத் தென்னிலங்கைத் தரப்பு விரும்புகிறது; எதிர்பார்க்கிறது. அதன் காரணமாகவே ஊடகச் சுதந்திரம் மீதான இந்தக் கொடூரப் பிடி இறுகு கின்றது. அடக்குமுறையும், அராஜகமும் கட்டவிழ்த்து விடப் படுகின்றன.

தமிழர் தரப்பின் குரல்வளையை நசுக்கி வைத்துக் கொண்டு இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு காண்பது என்பது நடக்க முடியாத விடயம். இதைத் தென்னிலங்கை உணர்வது நல்லது.

# சமாதானத்தை ஏற்படுத்த முடியாவிட்டால் சர்வதேச நாடுகள் போய்விட வேண்டும்

## வருவதும் போவதுமாக இருப்பதில் பயன் இல்லை என்கிறார் மனோ கணேசன்



கொழும்பு, ஒக். 13

''நாட்டில் தற்போது தொடர்கின்ற யுத்தத்தை நிறுத்தி முழுமையான சமாதானத்தை ஏற்படுத்தித் தர முடியாவிட்டால் சர்வதேச நாடுகள் இலங்கையை விட்டுப் போய்விட வேண்டும். சமாதானத்தை ஏற்படுத்தித் தரப் போகின்றனர் எனக் கூறிக் கொண்டு சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருவதும், போவதுமாக இருப்பதில் எந்தவித பிரயோசனமும் இல்லை. யுத்த நிறுத்த ஒப்பந்தம் அரசாலும், புலிகளாலும் கிழித்தெறியப்பட்டு விட்டதா அல்லது இல்லையா என்பதை சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் தெரிவிக்கவேண்டும்.''

- இவ்வாறு மேலக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

'யுத்தத்துக்கு எதிரான தேசிய முன்னணி' நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

''தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசும் மீண்டும் அமைதிப் பேச்சைத் தொடங்க இணக்கம் கண்டுள்ள போதிலும் இரு தரப்பினருக்குமிடையில் தாக்குதல் நடவடிக்கைகள் தொடருகின்றன.

தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடும் அரச தரப்பினரோ அல்லது புலிகளோ தாம் பதில் தாக்குதலை மட்டுமே நடத்துகின்றனர் எனக் கூறுகின்றனர்.

வலிந்து தாக்குதல் நடத்துபவர்கள் யார், பதில் தாக்குதல் நடத்துபவர்கள் யார் என்று தெரியாமல் உள்ளது. உண்மையில் இந்த விடயத்தில் இரு தரப்பினர்களில் ஒரு தரப்பினர் பொய் கூறுகின்றனர் என்று தெரிகிறது.

கடந்த ஒரு வாரத்துக்குள் வாகரை, புல்லுமலை மற்றும் முகமாலை போன்ற இடங்களில் பாரிய தாக்குதல் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. இதனால், யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளதா அல்லது இல்லையா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. சண்டையில் ஈடுபடும் இரு தரப்பினரும் தாங்கள் யுத்த நிறுத்தத்தை ரத்துச் செய்து விட்டனரா என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

தற்போதைய தாக்குதல்களினால் மக்கள் தினமும் இறக்கின்றனர். இந்த யுத்தத்தை இல்லாதொழித்து சமாதானத்தை ஏற்படுத்தித் தரும் முயற்சியில் சர்வதேச சமூகம் ஈடுபட்டுள்ள போதிலும், அதில் எந்த முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை.

எரிக் சொல்ஹெய்ம், ஜோன் ஹன்ஸன் போவர், யசூஷி அஹாஷி போன்றோர் இது தொடர்பாக இலங்கை வருகின்றனர், போகின்றனர். எந்த முன்னேற்றமும் இல்லை. சமாதானத்தை ஏற்படுத்தித் தர முடியாவிட்டால் சர்வதேச நாடுகள் இந்தப் பணியிலிருந்து விலகி நாட்டை விட்டுப் போய் விடுவது நல்லது.''

- இப்படி அவர் கூறினார்.

(7)

# திக்கம் சந்தியில் ஓட்டோ மீது சூடு; சாரதியும், உடன் சென்றவரும் மரணம்

உடுப்பிட்டி, ஒக்.13

திக்கம் சந்திக்கு சமீபமாக கலாசார நிலையத்துக்கு முன்பாக நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற சூட்டுச்சம்பவம் ஒன்றில், ஓட்டோச் சாரதி ஒருவரும் மற்றொருவரும் உயிரிழந்தனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்றை படையினர் நிறுத்துமாறு சைகைகாட்டினர் என்றும் -

நிறுத்தாது சென்ற ஓட்டோவை நோக்கி படையினர் வேட்டுக்களைத் தீர்த்து வழிமறித்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

பின்னர் ஓட்டோவில் அதன் சாரதியும், கூடச் சென்றவரும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை நீதிவான் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

பின்னர் சடலங்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டன.

இரு சடலங்களும் நேற்றிரவு வரை அடையாளம் காணப்படவில்லை என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ-1-155)

# ஊரடங்கு மேலும் ஒருமணி நேரம் தளர்வு

யாழ்ப்பாணம், ஒக்.13

வலிகாமம், தீவகம், வடமராட்சி ஆகிய பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டு வரும் ஊரடங்கு நேற்று மேலும் ஒரு மணிநேரம் தளர்த்தப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் கடந்த பல நாள்களாக 12 மணித்தியாலங்களுக்கு தளர்த்தப்பட்டிருந்த ஊரடங்கு நேற்றுமுதல் 13 மணித்தியாலங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்றுக்காலை 5 மணியிலிருந்து மாலை 6 மணிவரை ஊரடங்கு தளர்த்தப்பட்டதாக பலாலி பாதுகாப்பு தலைமை அலுவலகம் அறிவித்தது.

(1-203)

# காங்கேசன் - திருமலை கப்பல் சேவைக்கு முயற்சி

திருகோணமலை, ஒக்.13

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் 450 பயணிகள் பிரயாணம் செய்யக் கூடிய கப்பல் சேவை ஒன்றை நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று இந்தச் சேவையைத் தினமும் இரு இடங்களுக்கும் இடையில் நடத்த முயற்சிகள் மேற்கொண்டுள்ளது என்றும் -

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உட்பட சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் அந்த நிறுவனம் தொடர்புகளை ஏற்படுத்தி பேச்சுகளை நடத்தி வருகின்றது என்றும் - தெரியவந்துள்ளது.

அனேகமாக அடுத்த வாரம் தொடக்கம் இந்தச்சேவை ஆரம்பிக்கப்படலாம் என்று நம்பிக்கை வெளியிடப்படுகிறது.

(அ-1-151)

# இடம்பெயர்ந்த கல்விச் சமூகத்தினருக்கு..

யாழ்ப்பாணம், ஒக்.13

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வந்து மீளத்திரும்ப முடியாத நிலையில் உள்ள கல்விசார், கல்வி சாராத ஊழியர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை யாழ்.கல்வி வலயத்திற்கு அண்மையில் இடம்பெறவுள்ளது.

மீளத்திரும்ப முடியாது இங்கு தங்கியிருப்பவர்களின் போக்குவரத்து மற்றும் விடயங்கள் தொடர்பாக மாகாண ஆளுநருக்கு மகஜர் அனுப்புவது குறித்து இதில் ஆராயப்படவுள்ளதால் சகலரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(1)

# யுத்தத்துக்கு எதிராக நாளை மன்னாரில் அமைதிப் பேரணி

## தொடர்ந்து நாடு முழுவதும் நடத்த ஏற்பாடு

கொழும்பு, ஒக் 13

இலங்கை அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் இம்மாதம் நடைபெறவுள்ளதாகக் கூறப்படுகின்ற அமைதிப் பேச்சுக்கு பலம் சேர்க்கும் முகமாக 'யுத்தத்திற்கு எதிரான தேசிய முன்னணி' நாளை மன்னாரில் அமைதிப் பேரணி ஒன்றையும், விழிப்புணர்வுக் கூட்டங்களையும் நடத்தவுள்ளது.

இதனைத் தொடர்ந்து நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அடுத்தடுத்து இவ்வகையான பேரணிகளையும், கூட்டங்களையும் நடத்த இவ்வமைப்பு முடிவு செய்துள்ளது. இதுதொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று யுத்தத்திற்கு எதிரான தேசிய முன்னணியால் நேற்று கொழும்பில் நடத்தப்பட்டது. இதில் கலந்துகொண்ட முன்னணியின் முக்கியஸ்தர் குமார் ரூபசிங்க தெரிவித்ததாவது:-

''அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் பேச்சைத் தொடங்க இணக்கம் காணப்பட்ட போதிலும், இருதரப்புக்களுக்குமிடையில் இன்னும் தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இந்த யுத்த நடவடிக்கையை இரு தரப்பும் உடனடியாக நிறுத்தி அமைதிப் பேச்சுக்கான சாதகமான சூழலை உருவாக்க வேண்டும். இருதரப்பும் பேச்சு நடத்துவதற்காக எட்டப்பட்டிருக்கும் இணக்கப்பாட்டைப் பலப்படுத்துவது எமது கடமை. ஆகவே, இந்தத் தொடர் பேரணிகளை நாம் நாடுமுழுவதும் ஏற்பாடு செய்துள்ளோம்.

14 ஆம் திகதி மன்னாரில் நடைபெறும் இந்தப் பேரணியில் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொள்ளவுள்ளனர். அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

அந்தப் பேரணியில் லட்சக் கணக்கான மக்கள் கலந்துகொள்வர். அமைதிப் பேச்சு தொடங்கி, அனைத்து மக்களும் சுமூகமாக வாழக்கூடிய சூழல் தோன்றும் வரை எமது இந்த விழிப்புணர்வுப் போராட்டம் தொடரும்'' எனக் கூறினார்.

# வாசகர் திருமுகம்

## குழந்தைகளுக்கு பால்மா உடன் வழங்கப்படுமா?

யாழ்.குடாநாட்டில் குழந்தைகளின் பால்மா பெறுவதற்கு பெற்றோர்கள் அலைந்து திரிவது மனிதாபிமானமுள்ள அனைவரையும் கவலையில் ஆழ்த்துவதாக உள்ளது.

கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் கப்பல் மூலம் பால்மா எடுத்துவரப்பட்டதாக அறிவிக்கப்பட்டு இருந்தது.

இத்துடன் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களை உரிய கொள்வனவுக் கட்டளைகளைப் பெற்று பால்மா உட்பட ஏனைய பொருள்களையும் பெற்றுக்கொள்ளும் படியும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

உண்மையில் இன்று குழந்தைகள் என்று கருதக்கூடிய மூன்று வயதுக் குட்பட்ட சிறார்களின் பல பெற்றோர் தொழிலும், பணமும் இன்றி கஷ்டமுறுகிறவர்கள் பால்மாவுக்காக ஓடித்திரிவது கவலைக்குரியது.

கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ள பால்மாவகைகள் இறக்கப்பட்டதும் உடன் அவசரமாக உரிய சங்கங்களுக்கு வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை

இந்தப் பால்மா வகைகளைக் களஞ்சியங்களில் கிடந்து தூங்கவிடாது உடன் குழந்தைகள் உள்ளவர்களுக்கு வழங்கப்படவேண்டும். இதிலும் கூட செல்வாக்கு உள்ளவர்களுக்கு சலுகை காட்டப்படுவது கண்டிப்புடன் தடுக்கப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுப்பார்கள் என்று எதிர்பார்ப்போம்.

தலையாளி,கொக்குவில். க.அரவிந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம் அனுமதியின்றி கூட்டங்களைக் கூட்டுவதற்கு தடை விதிக்கும் சங்கரியின் கோரிக்கைக்கு ஆப்பு

## யாப்பைப் பேணுமாறு சம்பந்தருக்கு தீர்ப்பில் நீதிமன்றம் வலியுறுத்து

கொழும்பு ஒக்.13

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் என்ற கோதாவில் வி.ஆனந்தசங்கரி, அக்கட்சியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் மற்றும் சிரேஷ்ட பிரதித் தலைவர் ஜோஸப் பரராஜசிங்கம் ஆகியோருக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு கடந்த திங்களன்று வழங்கப்பட்டுள்ளது.

கட்சியின் யாப்புக்கு எதிராக கட்சியின் செயலாளர் நாயகமோ கட்சியின் சிரேஷ்ட பிரதித் தலைவரோ ஏனைய அலுவலகர்களோ அல்லது கட்சி உறுப்பினர்களோ செயற்படக்கூடாது என நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்தது.

அதேசமயம், தலைவர் என்ற முறையில் தமது எழுத்து மூல அறிவுறுத்தலோ ஆணையோ இன்றி எந்தக் கூட்டத்தைக் கூட்டும் ஏற்பாட்டையோ அல்லது கட்சியின் பிற நடவடிக்கைகளையோ கட்சியின் செயலாளர் நாயகம் செய்யக் கூடாது என உத்தரவிடுமாறு ஆனந்தசங்கரி விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் தனது தீர்ப்பில் ஏற்க மறுத்துவிட்டது.

நீதிமன்றம் தனது இறுதித்தீர்ப்பை வழங்கிவிட்டதால்-

மேற்படி கட்சியின் கூட்டங்களையும் கூட்டுதல் மற்றும் கட்சியின் ஏனைய நடவடிக்கைகளை கட்சித்தலைவரான வீ.ஆனந்தசங்கரியின் அனுமதியின்றி மேற்கொள்ளக்கூடாதென செயலாளர் நாயகம் இரா. சம்பந்தனுக்கு நீதிமன்றம் இதுவரை வழங்கியிருந்த இடைக்காலத் தடை உத்தரவும் காலாவதியாகிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீர்ப்புக் காரணமாக- இனிமேல் கட்சியின் யாப்பு ஏற்பாடுகளுக்கு அமைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டங்களைக் கூட்டுதல் உட்பட ஏனைய கட்சி நடவடிக்கைகளை கட்சியின் செயலாளர் நாயகம் தடையின்றி மேற்கொள்ளலாம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தாம் கூட்டத்துக்குச் செல்ல முடியாத இடத்தில் கட்சியின் கூட்டத்தை செயலாளர் நாயகம் கூட்ட முயன்றிருக்கிறார் என இந்த வழக்கில் வீ.ஆனந்தசங்கரி குற்றம் சுமத்தியிருந்தார்.

கட்சியின் செயலாளர் நாயகமும், கட்சியின் சிரேஷ்ட பிரதித் தலைவரும் கட்சியின் யாப்புக்கு எதிராகச் செயற்படக் கூடாது என உத்தரவிடுமாறு வீ.ஆனந்தசங்கரி விடுத்த கோரிக்கை நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என நீதிபதி அருணா ஸ்ரீ ரணசிங்க தமது தீர்ப்பில் தெரிவித்தார்.

எனினும், கட்சியின் கூட்டங்களைக் கூட்டுதல் மற்றும் பிற நடவடிக்கைகளுக்கு கட்சியின் தலைவரின் எழுத்துமூல ஆணையை கட்சியின் செயலாளர் நாயகம் பெற வேண்டும் என உத்தரவிடுமாறு ஆனந்தசங்கரி விடுத்த கோரிக்கை தீர்ப்பில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

வழக்காளி சார்பில் சட்டத்தரணி திஸாநாயக்க அமரதுங்கவின் அனுசரணையுடன் சட்டத்தரணி எவ்.எல்.குணசேகரவும் -

எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையுடன் சட்டத்தரணிகள் எம்.ஏ.சுமந்திரன், கே.பிரபாகரன் ஆகியோரும் ஆஜரானார்கள். (உ)

## எதிர்வரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதர் ஹன்ஸன் போவர் எதிர்வரும் 19 ஆம் திகதி இலங்கை வருகிறார்.

அவர் கிளிநொச்சிக்கு வருகைதரும் போது, தற்போது வெடித்துள்ள மோதல்களால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து விடுதலைப் புலிகள் அவருக்கு எடுத்துக் கூற இருக்கின்றனர் என புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்தார். (1)

## அதிரடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பினருக்கும் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

அதிரடிப்படையினரால் ஏவப்பட்ட ஷெல்கள், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் குடியிருப்புகள் மீது வீழ்ந்து வெடித்தன. இதனால், சில பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து வேறு பகுதிகளுக்குச் சென்றனர். (த)

## யாழ்.நகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திக்கும் இடத்துக்குச் சமீபமாக நேற்று நண்பகல் 12.30 மணியளவில் 'பிக்கப்' வாகனம் ஒன்றை நோக்கி கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் யாழ்.பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஜெயசிறி (வயது 47), பிரியந்த (வயது 35) ஆகியோர் மரணமானார்கள்.

இச் சம்பவத்தில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவரும் பொதுமக்கள் இருவரும் காயமடைந்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக நேரில் விசாரணைகளை யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலங்களை உறவினர்களிடம் கையளிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-68-79)

## மல்லாகத்தில் நேற்று கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஒக்.7

மல்லாகம் நீதிமன்றத்துக்கு வெளியே பாதுகாப்புப்பணியில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்றுக்காலை 9.45 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தெல்லிப்பழை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்தவரும் தங்கொட்டுவவைச் சேர்ந்தவருமான திலிப்குமார ரத்னசேகர (வயது 42) என்பவரேகொல்லப்பட்டவராவார்.

வழமையாக நீதிமன்றப்பணியில் ஈடுபடும் இவர் நேற்று நீதிமன்றத்துக்கு வெளியே நின்ற சமயம் சுடப்பட்டார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## முகமாலை, கிளாலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகமாலைக் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு விமானப் படையின் உதவியுடன் பதில் தாக்குதல் நடத்தப்பட்டதாக அரசாங்கத்தின் இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க கூறினார்.

இரண்டு நாள்கள் நடைபெற்ற இத் தாக்குதல்களிலும் புலிகள் தரப்பில் 200 பேர் உயிரிழந்தனர் என்றும் இராணுவம் தெரிவித்தது. அவர்கள் விட்டுச் சென்ற ஆயுதங்களையும் தாம் கைப்பற்றியதாக இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

படைத் தரப்பில் 55 இராணுவத்தினர் உயிரிழந்ததோடு 283 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, புதன்கிழமை சமரில் 78 பேர் காணாமற்போயுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை -

விடுதலைப் புலிகள் சார்பில் சர்வதேச நிறுவனங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் எம்.பாவரசன் இந்த சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கிளிநொச்சிப் பிரதிநிதி கட்ஜா லோறன்சிடம் நேற்று கையளித்தார்.

விடுதலைப் புலிகள் கையளித்த 74 சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் நான்கு லொறிகளில் ஏற்றி ஓமந்தைக்குக் கொண்டு சென்றனர்.

அவை நேற்று மாலை இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்டதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் சார்பில் பேசவல்ல சுகுமார் ரொக்வூட் தெரிவித்தார்.

இதேவேளை -

புதன்கிழமைச் சமரில் விடுதலைப் புலிகள் தரப்பில் 22 போராளிகள் வீரச்சாவடைந்ததாக இராணுவப் பேச்சாளர் இ. இளந்திரையன் தெரிவித்தார்.

வடபோர் முனையில் முறியடிப்புத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட துப்பாக்கிகளும், பல்லாயிரக்கணக்கான ரவைகளும் கைப்பற்றப்பட்டதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விவரம் வருமாறு:-

ரி - 56 இரண்டு வகைத் துப்பாக்கிகள் - 94, ரி - 56 வகைத் துப்பாக்கிகள் - 04, லோ - 01, 40 மில்லி மீற்றர் துப்பாக்கி - 01, ஏ.கே.எல்.எம்.ஜி. - 09, பி.கே.எல்.எம்.ஜி. - 07. (அ-1)

## மோதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறித்து நாம் வரவேற்கின்றோம். ஆனால், பேச்சுகளைச் சீர்குலைக்கும் நிலையில் அங்கு வன்முறைகள் ஏற்பட்டுள்ளமை கவலையளிக்கிறது.

இதேவேளை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மனிதாபிமானப் பணிகளைச் செய்வதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் பணிகளுக்கு இருசாராரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (க)

## தென்மராட்சி அதிபர்கள் கூட்டம் இன்று

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளின் அதிபர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

## அமைச்சரவையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கிடையில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுகளில் பங்கெடுத்த பிரதிநிதிகள் குழுக்கள் இரண்டும் அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதியைச் சந் தித்தன.

இச்சந்திப்பின்போது ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொரகொட, ருக்மன் சேனநாயக, ஜோன் அமரதுங்க, ரவி கருணாநாயக ஆகியோருடன் மலிக் சமரவிக்ரமவும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சமுகமளித்திருந்தனர்.

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் சார்பில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரு தரப்பினராலும் கலந்துரையாடப்பட்ட ஆறு முக்கிய விடயங்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள இணக்கப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றை கைச்சாத்திடுவது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் தீர்மானித்துள்ளன. பிரஸ்தாப புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும். பேச்சுகளில் கலந்துகொண்ட இரு தரப்பினரும் வெற்றிகரமான முறையில் பேச்சுகளை நிறைவு செய்தமை குறித்து ஜனாதிபதி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் ஆகியோர் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டதுடன் இந்த செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையில் இணையுமாறு ஜனாதிபதியால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அழைப்பும் விடுக்கப்பட்டது.

குறித்த செயற்றிட்டத்தின்போது ஒவ்வொரு கட்சியும் தத்தமது தனித்தன்மையைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் செயற்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நமது நாடு தற்போது எதிர்கொண்டுள்ள சவால்களை வெற்றிகொண்டு பொதுமக்களின் நலன்கள் பேணப்படுவதற்கான சூழலை உருவாக்குவதற்காக அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பம் ஏனைய கட்சிகளுக்கும் இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், இரு கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடலுக்குமேலதிகமாக ஜனாதிபதி மற்றும் எதிர்க் கட்சித்தலைவர் ஆகியோருக்கிடையிலான குறுகிய சந்திப்பொன்றும் இடம்பெற்றது.

## புலிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டைய எல்லைகள் எது என்று தெரியும். தேவைப்படும்போது விலக்கிக்கொண்டு மீளவும் கடுமையாகத் தாக்குவார்கள். அதனைத்தான் முகமாலையில் செய்துள்ளனர் - என்றார்.

ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் இலங்கை விமானப்படையின் ஓய்வு பெற்ற தளபதி ஹரி குணதிலக்க கூறியதாவது:-

முகமாலை மோதலின் மூலம் பேச்சுக்களுக்கான சந்தர்ப்பம் குறைந்துவருகிறது. இராணுவம் தன் சொந்தப் பரப்புரைக்கே பலியாகிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். விடுதலைப் புலிகளுக்கு பாரிய இழப்புகளை அண்மைய மாதங்களில் ஏற்படுத்திவிட்டோம். விடுதலைப் புலிகள் தோற்று ஓடுகிறார்கள் என்றெல்லாம் ஊடகங்கள் தொடர்ந்து செய்தி வெளியிட்டன. இன்று நடந்துள்ளமை மாறான அபிப் பிராயங்களைத்தருகின்றது. இத்தகைய தாக்குதல் நடவடிக்கைகள் நாம் பேச்சுகளுக்கு அப்பால் விலகிச் சென்றுகொண்டிருக்கிறோம் என்பதையே காட்டுகிறது - என்றார். (க)

## பதில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குப் பதிலளித்து சிவாஜிலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:-

பாதுகாப்பு நிலைவரம் குறித்து அரசு சிங்கள மக்களுக்கு பிழையான தகவல்களை வழங்குகின்றது. புலிகளின் வலிந்த தாக்குதலுக்கு பதில் தாக்குதலைத்தான் மேற்கொள்கின்றோம் எனக் கூறிக்கொண்டே படை நகர்வுகளை அரசு முன்னெடுக்கின்றது. பதில் தாக்குதலை மேற்கொண்டால் முகமாலையில் 75 சிப்பாய்களின் சடலங்கள் எப்படிக் கிடக்கும்?

மொத்தத்தில் முகமாலை முன்னரங்கை ஊடறுத்துக்கொண்டு படையினர் முன்னேற முயன்றுள்ளனர். புலிகளின் தாக்குதல்களால் சிப்பாய்கள் தமது சகாக்களின் சடலங்களையும் கைவிட்டுப் பின்வாங்கியுள்ளனர். இதுதான் நடந்தது. இப்படித் தான் நடந்துகொண்டிருக்கிறது.

- என்று கூறினார் சிவாஜிலிங்கம்எம்.பி.

SPOKEN ENGLISH with GRAMMAR
ஆரம்பம் 14.10.2006 சனி 10 a.m.
By: BRITTO
யூனிவேர்சல் (யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)
A/L DAY CLASS ஆரம்பம்

கிராம சேவையாளர் தரம் - II
தபால் அதிபர் பதவிக்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள் ஆரம்பம் 14.10.2006 2 மணி
வழிகாட்டி நூல் இங்கு கிடைக்கும்
திகழ் கல்வி நிறுவனம் கே.கே.எஸ். வீதி, இணுவில்

கணக்கீடு
A/L 2007, 2008 DAY
Balavasan ஆசிரியரினால் எடுக்கப்பட்ட வகுப்புக்கள் அனைத்தும் பாலகஜன் ஆசிரியரினால் கீழ்வரும் இடங்களில் எடுக்கப்படும்.
Beacon - யாழ்நகர்
Brian Power - குருநகர்
Radiant - அரியாலை
Niru - கோண்டாவில்
நேர அட்டவணை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

பிரத்தியேக வகுப்பு ஆரம்பம்
14.10.2006 SAT 11am
புவியியல் A/L 2007 Day Class
ஆசிரியர் N.S.சங்கர் B.A.(Hons)Geog.
மயிலணி சிவன் கோவில் முன் சுன்னாகம்.

A/L தமிழ் BEACON
நாக. தமிழிந்திரனின் வகுப்புகள் யாவும் BEACON இல் மட்டுமே நடைபெறும், (D.C.M உட்பட)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org